செய்தி வெளி வந்திருக்கிறது. அதிலே எது உண்மை என்பதை இம்மாமன்றத்திற்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், வேலூர் மருத்துவமனையிலே 3 போலீஸ் அதிகாரிகள் காவலில் இருந்தார்கள். அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை பிரிசன்ஸ் ஸ்டாஃப்--சிறை அதிகாரிகள் இரண்டு பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, 3 போலீஸ் அதிகாரிகளும், இரண்டு சிறை அதிகாரிகளும் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று உறுப்பினர்கள் திரு. இளம்வழுதி மற்றும் திரு. எஸ். திருநாவுக்கரசு தள்ளிவைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை-பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தினுடைய எதிர்க் கட்சி வரிசையில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி இரண்டாம் தடவையும் வெளியேற்றப்பட்ட பின்னால், தொடர்ந்து இந்த சட்டமன்றக் கூட்டம் முடியும் வரையிலே கலந்துகொள்ளக் கூடாது என்று தங்களுடைய தீர்ப்பை அளித்திருக்கிறீர்கள். அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் எஸ். திருநாவுக்கரசு அவர்களும் இங்கே வெளியேற்றப்பட்டு அவர்களும் சட்டமன்றக் கூட்டத்தொடர் முழுமையும் கலந்துகொள்ளக் கூடாது என்று தாங்கள் தீர்ப்பளித்து இருக்கிறீர்கள். அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பீட்டர் அல்போன்ஸ்., இப்படி தொடர்ச்சியாக நடைபெறுகிற சட்டமன்றக் கூட்டத்தில்--காங்கிரஸ் கட்சியினுடைய இயக்கத் தலைவர்கள் இருக்கிறார்கள். பல்வேறு கருத்துக்களைச் சொல்வதற்கு அவர்களுக்கு

வாய்ப்பு இருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களும், திருநாவுக்கரசு அவர்களும்....

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே இந்த அளவுக்குக் கூட தேவையில்லாத பிரச்சினைதான். அவர்கள் எவ்வளவு முறைகேடாக நடந்து கொண்டார்கள் என்பதை நீங்களே பார்த்துக் கொண்டிருந்தீர்கள். நான் எவ்வளவு முறை பொறுத்துக்கொண்டே போனேன் என்பது உங்களுக்குத் தெரியும். இந்த அவை நடவடிக்கையை நடத்த விடுவதில்லை என்பதைப் போல ஒரு முடிவு செய்துகொண்டு, பிடிவாதமாக நடந்து கொள்ளும் உறுப்பினர்களிடத்தில் நான் என்ன செய்ய முடியும்? நான் எவ்வளவோ முறை சொல்லிப் பார்த்தேன். பலமுறை வெளியேற்றுகிறேன் என்று நான் சொல்லியும்கூட, அவர்களே, வெளியேறுகிறோம் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். அதைக்கூட நான் பொறுத்துக்கொண்டு பேசாமல் விட்டு விட்டேன். இவ்வளவு முறைகேடாக நடந்துகொள்கிற உறுப்பினர்கள் இனிமேல் அப்படி நடக்க மாட்டார்கள் என்பதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, 'நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன், அதைப் பற்றிப் பரிசீலனை செய்யுங்கள்' என்றாவது கேட்கலாம். அப்படிப் பொறுப்பை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள். அவர்கள் அப்படித்தான் செய்வார்கள், தலைவர்தான் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. அது வேண்டாம். (குறுக்கீடு) முறைகேடாக நடந்துகொண்டே இருக்கிறார்கள். ஒன்றுக்கு இரண்டு, மூன்று முறை முறைகேடாக நடந்து கொண்ட உறுப்பினர்களை நான் என்ன செய்வது? மற்ற உறுப்பினர்களுக்கு இது ஒரு படிப்பினை. (குறுக்கீடு) அவர்கள் கட்சியின் கருத்தைச் சொல்ல வேண்டுமென்பதால் முறைகேடாக நடந்துகொள்ள அனுமதித்துக் கொண்டிருக்க முடியுமா? (குறுக்கீடு) கட்சியின் கருத்துக்களை முறைகேடாகத்தான் சொல்ல வேண்டுமா? (குறுக்கீடு) அது வேண்டாம். மற்ற உறுப்பினர்களுக்கு இது ஒரு படிப்பினையாக இருக்கட்டும். (குறுக்கீடு) நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். இது மற்ற உறுப்பினர்களுக்குப் படிப்பினை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சிக்கு ஒருவர்தான் இருக்கிறார்கள். அவர்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவை எப்படி வேண்டுமானாலும் முறைகேடாக நடக்கட்டும் என்று அவர்களை அனுமதிக்க முடியுமா? (குறுக்கீடு) நீங்கள் சொல்வது அப்படித்தான் இருக்கிறது. அவர்கள் முறையாக நடந்து கொண்டார்கள் என்றாவது உங்களால் சொல்ல முடியுமா?

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பக்கத்திலேதான் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிமுறைப்படிதான் அவர்கள் நடந்துகொண்டார்கள் என்றாவது சொல்ல முடியுமா? இதிலே ஏதாவது ஒன்றைச் சொல்லிவிட்டு, மறுபரிசீலனை செய்யுங்கள் என்று என்னிடம் கேளுங்கள். எதுவுமேயில்லாமல் கேட்டுக் கொண்டிருப்பது வேண்டாம். இது பற்றி என்னுடைய முடிவை ஒன்றுக்கு இரண்டு, மூன்று முறை சொல்லியாகிவிட்டது. எனவே உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு

(அ) குன்னூர் நிலச் சரிவில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அரசு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. த. க. இராதாகிருஷ்ணன் மற்றும் டாக்டர் எம். கருப்புசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எம். கருப்புசாமி. அவருடைய தொகுதியைச் சேர்ந்தது.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குன்னூர் நிலச் சரிவில் உயிர் இழந்தோரின் குடும்பங்களுக்கு அரசின் உதவித் தொகை வழங்கப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.